**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.**

**O.S No.269/2018** **Date:11.09.2024**
**(P.W-2 )**

திரு. ராதாகிருஷ்ணன் த /பெ.சந்தானம்
**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :
சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1) நான் சின்ன செங்கோடன்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் மற்றும் கன்ஸ்டன்சன்ஸ், மார்கெடிங் செய்து வருகிறேன். மேற்கண்ட தொழில்களுக்கு நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சியம் அழைக்க வாதி திருமலைசாமி என்னை அழைத்தார் என்றால் சரிதான். வாதி என்னுடைய வாடிக்கையாளர் என்றால் சரிதான். பிரமான வாக்குமூலத்தை எங்கு வைத்து தயார் செய்துள்ளேன் என்றால் வாதியின் வழக்கறிஞரின் அலுவலகத்தில் வைத்து தயார் செய்தேன். அந்த சமயத்தில் வாதி என்னுடன் இருந்தார் என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் நான், வாதி, வழக்கறிஞர் ஆகியோர் சொன்ன விபரம் உள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னது தான் உள்ளது. விளம்புகை பரிகாரம் தொடர்பாக பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 15-ல் அ, ஆ, இ ஆகிய பத்தியில் உள்ள விபரங்களை வாதி சொன்னது என்றால் சரியல்ல. நான் தான் சொன்னேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை பார்கையில் நான் பொய் சாட்சியம் சொல்வது தெரியவருகிறது என்று சொன்னால் சரியல்ல.

2) வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் உள்ள ஆவணங்களில் என்னுடைய கையெழுத்து எதுவும் இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி நிறுவனத்தில் நான் பணிபுரிந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வாதியின் பொய் சாட்சியம் என்றும், எனக்கும் பிரதிவாதிகளுக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. வாதி தரப்பு வா.சா.ஆ-1 ஆவணத்தில் உள்ள கையொப்பம் மாணிக்கம் என்பவருடையது என்று வாதி சொன்னதன் அடிப்படையில் நான் சாட்சியம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 4வது பத்தியில் ரசிதில் உள்ள கையொப்பம் என்னுடையது என்று எழுதி பின்னிட்டு மாணிக்கம் என்பவருடையது என்று திருத்தம் உள்ளது என்றால் சரிதான். வாதி தாவா சொத்தில் ஒரு பகுதியை கிரையம் செய்து கொண்டதை நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். மேற்கண்ட கிரைய தேதியிலேயே தாவா சொத்தின் மிதி பகுதி 4ம் பிரதிவாதி பெயரில் கிரையம் செய்யப்பட்டது என்று தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான்.

3) பிரமாண பத்திரத்தில் 6வது பத்தியில் வாதி வசமும் 3648.5 சதுர அடி நிலம் என்னுடைய அனுபவ சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்று குறிப்பிட்டு என்னுடைய என்ற வாசகம் அடிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. நான் கொடுத்த சாட்சியத்திலிருந்து உண்மை தன்மை சந்தேகத்திற்குரியதாக உள்ளது என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி, 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளின் பினாமி என்று வாதி சொன்னதன் பேரில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி திருமலைசாமி தாவா சொத்தில் உள்ள ஒரு பகுதியை கிரையம் செய்து கொடுக்க அதிகாரம் 3ம் பிரதிவாதியிடம் உள்ளது என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தின் மீது எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல ஒப்பந்தம் உள்ளது. 1, 2 பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளது என்பதை காண்பிக்க ஆவணம் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி தெரியாது. குறுகிய கால ஏற்பாடாக 4ம் பிரதிவாதியை ஏற்பாடு செய்து கிரைய ஆவணம் ஜோடிக்கப்பட்டுள்ளது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுக்கும் வாதிக்கும் எந்த தொடர்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. கட்டிடம் கட்டு பொறுப்பு ஏற்றுகொண்டார்கள் என்றும், சொத்தை விற்பனை செய்ய 1, 2 பிரதிவாதிகளுக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி சொன்னதன் பேரில் ஆவணம் முன்னிலைப்படுத்தாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்திற்கு தொடர்ப்பு இல்லை என்றால் சரியல்ல.

**3, 4** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1) வாதி 7, 8 வருடமாக தெரியும். வாதி பெயருக்கு உள்ள கிரைய பத்திரத்தை நான் நேரில் பாத்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வாதி பத்திரத்தில் எத்தனை அளவு சொத்தை யாரிடமிருந்து எவ்வளவு தொகைக்கு கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சுமாராக 13 சென்ட் பூமியை 1 சென்ட் 2.25 லட்சத்திற்கு திருவெங்கடத்திடமிருந்து வாங்கியுள்ளார். 13 சென்ட் இடம் எத்தனை சதுர அடி என்றால் சுமார் 5500 சதுர அடி இருக்கும். வாதி 3ம் பிரதிவாதியிடமிருந்து 2044 சதுரடி அளவு நிலத்தை கிரையம் பெற்றுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கிரைய பத்திரத்தில் எத்தனை தொகைக்கு வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியாக தெரியாது. 13 சென்ட் இடத்திற்கு ரூ.6.50 லட்சத்திற்கு கிரையம் பேசியதாக சொல்வதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது.

2) 3ம் பிரதிவாதி எழுத்து பூர்வமாக வாதிக்கு கிரையம் கொடுப்பதாக எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியாக தெரியாது. வாதி கிரைய தேதிய தவிர வேறு தொகையை 3ம் பிரதிவாதிக்கு கொடுத்ததாக குறிப்பிடவில்லை என்றால் ஞாபகமில்லை. 1, 2 பிரதிவாதிகள் கட்டிடம் கட்டும் பணி மட்டும் செய்து வருகிறார்கள் என்றால் இடம், வீட்டு

மணை, வீடு ஆகியவற்றை சேர்ந்து தான் செய்து வருகிறார்கள். எஸ்.ஆர்.வே. கா்டன் எத்தனை ஏக்கரில் எந்த காலையில் உள்ளது என்றால் சரியாக தெரியவில்லை. நான், 3 ம் பிரதிவாதிக்கோ, அல்லது 1, 2 பிரதிவாதிக்கோ எந்த தொகையும் செலுத்தவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எந்த இடத்தில் உள்ளது நான் எப்போது கடைசியாக பா்ாத்தேன் என்றால் பெருமாநல்லூர் பள்ளி அருகே எஸ்.ஆர்.வி கார்டன் உள்ளது. நான் அதை பார்த்ததில்லை. என்னுடைய முகவரியை வாதிக்கு எப்போதாவது கொடுத்துள்ளேனா என்றால் வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் கொடுத்துள்ளேன். வாதிக்கு 1, 2 பிரதிவாதிகள் வீடுகட்டி காம்போன்ட் கட்டி கொடுத்துள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 2044 சதுரடி என்பது எவ்வளவு நீல, அகலம் என்று கேட்டால் எனக்கு தெரியாது.

3) 4ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரத்திற்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் உள்ள 3648.5 சதுரடி இடத்திற்கும் எனக்கும் உரிமை இல்லை என்றால் சரிதான். நான் MCA வரை படித்துள்ளேன். கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள தொகை வங்கி மூலமாக பரிமாற்றம் செய்யப்படும் என்றால் சரிதான். பத்திரத்திற்கு தொடர்பில்லாத நான் அந்த பத்திரம் செல்லாது என்று நான் ஏன் கூறியுள்ளேன் என்றால் வாதி என்னுடைய வாடிக்கையாளர் ஆவார். 13 செண்ட் நீல, அகலம் எவ்வளவு என்றால் தெரியாது. அதில் வாதி எந்த பகுதியை கிரையம் செய்தார் என்றும், 4ம் பிரதிவாதி எந்த பகுதி கிரையம் பெற்றார் என்றும், எனக்கு தெரியாது என்றால் ஞாபகமில்லை. வழக்கு சொத்து சம்மந்தாக காவல் நிலையத்தில் வழக்கு இருந்த விபரம் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. காவல் நிலையத்தில் வாதி புகார் கொடுத்த போது நான் காவல் நிலையத்தில் ஆஜராகி நிலத்தை கிரையம் செய்து கொடுக்க உதவி செய்தது குறித்து எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 1, 2 பிரதிவாதிகளின் ஏஜென்ட் இல்லை என்றும், வாதி கேட்டுகொண்டதன் பேரில் அவர் தயார் செய்து கொடுத்த பிரமாண வாக்குமூலத்தில் கையொப்பம் போட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சென்னை உயர் நீதிமன்றத்தில் எந்த வழக்கு, எப்போது போட்டு உத்தரவு பெற்றார்கள் விபரம் எனக்கு தெரியாது என்றால் ஓரளவு தெரியும், காலம் மட்டும் தெரியாது. 4ம் பிரதிவாதி 3648.5 சதுரடி இடத்தை தகுந்த பிரதிபியோஜனத்தின் பேரில் 3ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்று கிரய தேதியிலிருந்து சுவாதீனத்திலிருந்து தற்போது வரை முழு உிமையாளராக வேலி போட்டு அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவர் அனுபவிப்பதை தடை செய்ய வேண்டி நானும், வாதியும் சேர்ந்து இடையூறு செய்கிறோம் என்றால் சரியல்ல.

4) வா.சா.ஆ-1 ஆவணத்தில் காலை எண், கிரைய தொகை உள்ளிட்ட விபரங்கள் இல்லை

என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1ம் பிரதிவாதியின் கையெழுத்தோ, நிறுவனத்தின் முத்திரை இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை நானும், வாதியும் சேர்ந்து தயார் செய்தோம் என்றால் சரியல்ல. அதனால் தான் அந்த ஆவணத்தில் 1, 2 பிரதிவாதியும் கையொப்பம் போடவில்லை என்றும் முத்திரையும் இடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மாணிக்கம் என்பவரின் கையொப்பம் உள்ளது. மாணிக்கம் என்பவர் 1ம் பிரதிவாதியின் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியானது என்பதால் தான் அதில் கிராமம் பெயர், காலை எண், விஸ்தீரணம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. என் சாட்சியம் பொய் சாட்சியம் என்பதால் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S VADIVEL
Digitally signed by S VADIVEL
Date: 2024.09.11 06:38:45 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.